# கன்னிமரியாளின் மினவுதல் விழா

இவ்விழாவில் நான்கு நிகழ்ச்சிகளைக் கொண்டாடுகிறோம்.

1. கபிரியேல் அதிதூதர் கிறிஸ்துவின் மனித அவதாரத்தை அறிவித்த பின் கன்னிமரியாள் தன் உறவினளான எலிசபெத்தம்மாளைச் சந்திக்க சென்றது.
2. அவளது உதரத்திலிருந்த ஸ்நாபக அருளப்பர் கன்னி மரியாளின் வாழத்து மொழிகளைக் கேட்டதும் ஜென்மப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.
3. பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எலிசபெத்தம்மாள் “பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே” என கன்னி மரியாளைப் பாராட்டியது.
4. “என் ஆன்மா ஆண்டவரே ஏத்திப் போற்றுகின்றது” என்னும் உயரிய பாடலை மரியாள் இசைத்தது.

எலிசபெத்தம்மாள் எருசலேமிலிருந்து மேல் திசையில் ஆறு மைல் தொலைவில் மலை நாட்டில் வசித்து வந்தாள். அவளுக்கு உதவி செய்யும் படி கன்னிமரியாள் சென்றாள். தன்னைவிட தாழ்ந்த நிலையில் ஒரு பெண்ணுக்கு உதவி செய்யப் போகிறாள். அவளை கூப்பிடாமலே தானாகச் செல்கிறாள். ஒன்று இரண்டு நாட்களல்ல. மூன்று மாதங்களாக அங்கு தங்கி எல்லா வேலைகளையும் செய்கிறாள்.

எலிசபெத்தம்மாள் அவளை வாழ்த்தியதும், தன்னைப்பற்றி பெருமை கொள்ளாமல் கடவுளை வாழ்த்துகிறாள் மரியாள். ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தம்மாளோடு தங்கியிருந்தபின் வீடு திரும்பினாள்.

**சிந்தனை:**

கன்னிமரியாள் உண்மையான பிறர் சிநேகத்துடன் எலிசபெத்தம்மாளுக்கு உதவி செய்யச் சென்றாள். நாம் பிறருக்கு உதவி செய்யாவிட்டாலும், உபத்திரவமாய் இராதபடியாவது பார்த்துக்கொள்ள வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, என் அயலாரை நான் என்னைப்போல் நேசிக்கும் வரம் தாரும்.